தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தலையங்கம்: அறுவடை யாருக்கு?**

First Published : 08 Apr 2011 03:56:16 AM IST

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை முன்கூட்டிய காலாண்டு மதிப்பீடு ஒன்று விவசாய அமைச்சகத்தால் வெளியிடப்படும். இந்த அறிக்கை, இந்தியாவின் உணவு உற்பத்தி நிலைமை, விளைச்சல், கையிருப்பு போன்ற விவரங்களை வெளிப்படுத்தும். இதன் அடிப்படையில்தான் அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி நிலவரம், தட்டுப்பாடு ஏற்படும் என்று கருதப்பட்டால் அந்த உணவுப் பொருள்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெளிநாட்டில் கொள்முதல் செய்து இறக்குமதி செய்வது என்றெல்லாம் மத்திய அரசு முடிவெடுக்கும்.

இந்த ஆண்டுக்கான உற்பத்தி மதிப்பீட்டின்படி கோதுமை, அரிசி, பருப்பு வகைகள், பருத்தி, எண்ணெய் வித்துகள் என்று எல்லா பொருள்களுமே அபரிமிதமான உற்பத்தி அதிகரிப்பைக் காட்டி இருக்கின்றன. 2008-09-ம் ஆண்டுக்கான மொத்த உணவுப் பொருள்களின் உற்பத்தி 234.47 மி.ட. என்றால், இந்த ஆண்டில் அது 275.88 மி.ட.ஆக உயரும் என்கிறது அந்த அறிக்கை.

ஏப்ரல் 1-ம் தேதி நிலவரப்படி, 15 மி.ட. கோதுமையும், 30 மி.ட. அரிசியும், மத்திய அரசின் கையிருப்பாக உள்ளது. அதாவது மொத்தம், 45 மில்லியன் டன். இதுவே கடந்த ஆண்டு 21.2 மி.ட.தான் என்கிறது அந்த அறிக்கை.

விவசாய அமைச்சகத்தின் மூன்றாவது காலாண்டுக்கான முன்கூட்டிய மதிப்பீட்டின்படி, பருப்பு வகைகள் 17.3 மி.ட., எண்ணெய் வித்துகள் 30.2 மி.ட., பருத்தி 33.9 மில்லியன் பேல்கள் என்று அபரிமிதமான உற்பத்திப் பெருக்கம் இருப்பதாகக் குறிப்பிடுகிறது. அறிக்கையைப் படிக்கும்போது ஏற்பட்ட உற்சாகம், அறிக்கையை ஆராய்ந்து பார்க்கும்போது சட்டென வற்றி விடுகிறது.

ஒவ்வொரு பொருளின் உற்பத்தி இலக்கையும், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான விளைச்சலையும், இப்போதைய முன்கூட்டிய மதிப்பீட்டையும் பார்க்கும்போது உற்சாகம் தரும்படியாக இல்லை என்பதுதான் உண்மை. உணவுப் பொருள்களின் உற்பத்தி மதிப்பீடான 235.9 மி.ட. என்பது 2008-09-ன் 234.5 மி.ட. உற்பத்தியைவிட சற்று அதிகம் அவ்வளவே. திட்டமிடப்பட்ட இலக்கான 244.5 மி.ட.னைவிடக் குறைவாகத்தான் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

சொல்லப்போனால், அரிசி, எண்ணெய் வித்துகள், பருப்பு வகைகள் போன்றவை திட்டமிடப்பட்ட இலக்கைவிட 10% குறைவாகத்தான் உற்பத்தியாகும் போலிருக்கிறது. 2008-09-ல் அரிசி உற்பத்தி அதுவரை இல்லாத அளவுக்கு 99.2 மி.ட.ஆக உயர்ந்தது. அந்த இலக்கை இந்த ஆண்டுக்கான உற்பத்தி எட்டும் என்று தோன்றவில்லை. அறிக்கையின்படி அதைவிடக் குறைவாகவேதான் உற்பத்தி காட்டப்பட்டிருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவின் மக்கள்தொகை மூன்றரைக் கோடி அதிகரித்திருக்கிறது. அதேநேரத்தில் தனிநபருக்கான உணவு விகிதம் குறைந்திருக்கிறது. உலகளாவிய அளவில் காணப்படும் விலைவாசி ஏற்றம், அதிகரித்த பெட்ரோலிய கச்சா எண்ணெயின் விலை, தட்பவெப்ப நிலையில் காணப்படும் மாறுதல்கள், டாலரின் மதிப்புச் சரிவு என்று பல்வேறு அம்சங்கள் இந்தியாவின் விலைவாசியைப் பாதிக்கிறது. அதனால், மூன்றாவது காலாண்டுக்கான முன்கூட்டிய உற்பத்தி மதிப்பீட்டில் காணப்படும் அதிகரித்த உற்பத்தி எந்த விதத்திலும் விலைவாசியைக் கட்டுக்குக் கொண்டு வரவோ, உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்கவோ பயன்படாது.

முதலாவது காலாண்டுக்கான மதிப்பீட்டின்படி இந்த ஆண்டுக்கான கரும்பு உற்பத்தி 324.912 மி.ட. என்று கருதப்பட்டது. இரண்டாவது காலாண்டில் அது 336.698 மி.ட.ஆக அதிகரிக்கப்பட்டது. இப்போது மூன்றாவது காலாண்டு மதிப்பீட்டின்படி அதுவே 340.545 மி.ட.ஆக, மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அதிகரித்த உற்பத்தி, அதிகரித்த சர்க்கரை உற்பத்திக்கு வழிகோலுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதற்குள் நமது மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத் பவார், சர்க்கரை ஏற்றுமதியைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டிருக்கிறார். அதிகமான உற்பத்தி என்று கூறப்பட்ட 2006-07-ல் (355 மி.ட.) இதேபோல கரும்பு உற்பத்தியைக் காரணம் காட்டி, சர்க்கரை ஏற்றுமதிக்குக் கண்ணை மூடிக்கொண்டு அவர் அனுமதி அளித்ததன் விளைவால்தான் இன்றுவரை சர்க்கரை விலை இறங்காமல் இருக்கிறது என்பதை யாரிடம் போய்ச் சொல்லி நாம் நியாயம் கேட்க முடியும்?

கடந்த 2007 பிப்ரவரி முதல் கோதுமை ஏற்றுமதியும், 2008 ஏப்ரல் முதல் அரிசி ஏற்றுமதியும் தடை செய்யப்பட்டுள்ளது. இப்போதே நம்மிடம் இருக்கும் கையிருப்பு அதிகம் உள்ளதால், தடைகளை அகற்றி, தேவைக்கு அதிகமான உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வழிகோல வேண்டும் என்பது உணவு அமைச்சர் சரத் பவாரின் கோரிக்கை.

அளவுக்கதிகமான உற்பத்தி ஏற்படும்போது அதைப் பாதுகாக்க நம்மிடம் போதுமான கிடங்குகள் இல்லையென்பதும், அதனால் உணவு தானியங்கள் வீணாகின்றன என்பதும் உண்மைதான். உச்ச நீதிமன்றம் தலையிட்டு, தேவைக்கு அதிகமாக இருக்கும், வீணாகும் உணவு தானியங்களை

ஏழைகளுக்காவது விநியோகம் செய்யக் கூடாதா என்று கேட்டதும் நிஜம். அதற்காக சேமிப்பில் கவனம் செலுத்தாமல் ஏற்றுமதி செய்ய அனுமதித்துவிட்டுத் தட்டுப்பாடு வந்தால், அப்பாவி மக்களைப் பட்டினி போடுவதுதான் அரசுக்கு அழகா?

காஷ்மீரையும் கன்னியாகுமரியையும் இணைத்து விவசாய நிலங்களை அழித்து இந்தியாவைச் சுற்றித் தங்க நாற்கரச் சாலை அமைக்க முடிகிறது. ஏழை, பணக்காரர் என்று தேவைக்கு ஏற்பத் தரப்படாமல் டி.வி., பிரிட்ஜ், மிக்சி, கிரைண்டர், ஆடு, மாடு என்று இலவசங்கள் என்கிற பெயரால் அரசு கஜானாவைச் சூறையாடி வாக்குகள் வாங்க முடிகிறது.

ஆனால், நமது ஆட்சியாளர்களால் உற்பத்தியாகும் விளைபொருள்களைப் பத்திரமாகப் பாதுகாக்க உணவுக் கிடங்குகளையும், முறையாக விநியோகம் செய்ய அமைப்புகளையும் உருவாக்க முடியவில்லை. நன்றாக இருக்கிறது இவர்கள் நாடாளும் லட்சணம்.

உணவுப் பாதுகாப்புதான் தேசப்பாதுகாப்பு என்பதுகூடத் தெரியாதவர்களின் கையில் தேசம். அமோகமான விளைச்சல் விவசாயிக்கு, ஆனால், அறுவடை என்னவோ அரசியல்வாதிக்கு...

தினமலர்

**உணவுப் பொருள் பணவீக்கம் 9.18 Œதவீதமாக குறைந்தது**

ஏப்ரல் 08,2011,04:09

புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள்கள் பணவீக்கம், öŒன்ற மார்ச் மாதம் 26ம் @ததியுடன் நிறைவடைந்த வாரத்தில் 9.18 Œதவீதமாக சரிவடைந்துள்ளது.



புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள்கள் பணவீக்கம், öŒன்ற மார்ச் மாதம் 26ம் @ததியுடன் நிறைவடைந்த வாரத்தில் 9.18 Œதவீதமாக சரிவடைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில், 9.50 சதவீதமாக இருந்தது.தற்போதைய உணவுப் பணவீக்க அளவு, கடந்த நான்கு மாதங்களுக்கு பிறகு, மீண்டும் குறைந்துள்ளது. அதாவது, சென்ற ஆண்டு நவம்பர் 27ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், இது, 8.69 சதவீதமாக மிகவும் குறைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.கணக்கீடு செய்வதற்கு எடுத்து கொள்ளப்பட்ட வாரத்தில், முக்கிய பருப்பு வகைகளின் விலை குறைந்திருந்தது.

குறிப்பாக, ஆண்டுக்கணக்கில், இவ்வாரத்தில் பருப்பு வகைகளின் விலை 5.39 சதவீதம் குறைந்திருந்தது. அதேசமயம், ஆண்டுக்கணக்கில் ஒப்பிடும் போது, பழங்கள் விலை 25.40 சதவீதம் உயர்ந்திருந்தது. முட்டை, இறைச்சி, மீன்கள் போன்றவற்றின் விலை 12.80 சதவீதம் அதிகரித்திருந்தது. மேலும், பாலின் விலை 3.80 சதவீதம் உயர்ந்திருந்தது.இவை தவிர, தானியங்கள் விலை 3.62 சதவீதம் அதிகரித்து காணப்பட்டது.

அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றின் விலை முறையே, 2.08 சதவீதம் மற்றும் 0.29 சதவீதம் அதிகரித்திருந்தது. காய்கறிகள் (11.41 சதவீதம்), உருளைக்கிழங்கு (5.30 சதவீதம்) மற்றும் வெங்காயம் (8.48 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.உணவுச் சாராத பொருள்களின் விலையும் உயர்ந்திருந்தது. இப்பிரிவின் கீழ், நூலிழை (86.90 சதவீதம்), எரிபொருள் மற்றும் மின்சாரம் (13.13 சதவீதம்), பெட்ரோல் (23.14 சதவீதம்) போன்றவற்றின்

விலையும் உயர்ந்திருந்தது.உணவுப் பொருள்களின் விலை உயர்வு தான், நாட்டின் பொது பணவீக்கம் அதிகரிப்பிற்கு காரணம் என மத்திய அரசு அண்மையில் தெரிவித்திருந்தது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் பொது பணவீக்கம், சென்ற பிப்ரவரியில் 8.31 சதவீதமாக இருந்தது.நடப்பு 2010-11ம் வேளாண் (ஜூலை - ஜூன்) பருவத்தில் நாட்டின் தானியங்கள் உற்பத்தி 23.59 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மத்திய வேளாண் அமைச்சகம் புதன்கிழமையன்று தெரிவித்திருந்தது. இந்த உற்பத்தி, இதுவரையில்லாத சாதனை அளவாகும். எனவே, இனி வரும் காலங்களில், உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் குறையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேயிலை வர்த்தகத்தில் தொடரும் மந்தநிலை:காலாண்டு வருமானத்தில் பலத்த "அடி'**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 08,2011,01:46 IST

குன்னூர் : நீலகிரி தேயிலை ஏலத்தில் தொடரும் மந்தநிலையால் வர்த்தக வருமானத்தில் வீழ்ச்சி தொடர்கிறது; கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டின் முதல் காலாண்டில் 12 கோடி ரூபாய் வருமான குறைவு ஏற்பட்டுள்ளது.நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் வாரந்தோறும் வியாழன், வெள்ளி நாட்களில் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்கப்படுகிறது.

கடந்த 3 மாதமாக உள்நாட்டு, ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலையால், பெருமளவு தேயிலை தூள் தேக்கமடைகிறது; இதனால், வர்த்தக வருமானம் குறைகிறது. கடந்த மூன்று மாதமாக வாரந்தோறும் விற்பனைக்கு வரும் தேயிலை தூளில் சுமார் 15- 20 சதவீத தேயிலை தூள் தேக்கமடைந்தது. கடந்த வார ஏலத்தில் மட்டும் விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் சுமார் 3.65 கோடி ரூபாய் மதிப்புள்ள 46 சதவீத தேயிலை தூள் தேக்கமடைந்தது.

விளைவாக, "கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டின் முதல் மூன்று மாதத்தில் 12 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது,' என குன்னூர் கோத்தாரி வேளாண்மை மேலாண்மை மையத்தில் நடந்த தேயிலை கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது; இதில், சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் பேசியதாவது:இந்தாண்டின் முதல் மூன்று மாத்தில் 12 ஏலங்கள் நடந்துள்ளன; மொத்தம் 99.8 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்கப்பட்டது.

விற்கப்பட்ட தேயிலை தூளின் சராசரி விலை கிலோவுக்கு 72.41 ரூபாயாக இருந்தது; மொத்த வருமானம் 72.07 கோடி ரூபாயாக இருந்தது. கடந்தாண்டின் (2010) முதல் மூன்று மாதத்தில் 109 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்கப்பட்டது; சராசரி விலை 69.56 ரூபாயாக இருந்தது; மொத்த

வருமானம் 75.82 கோடி ரூபாயாக இருந்தது. இதன் மூலம் கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டின் முதல் மூன்று மாதத்தில் 3.55 கோடி ரூபாய் வருமான குறைவு ஏற்பட்டுள்ளது.

தேயிலையின் சராசரி விலை உயர்ந்தாலும், வர்த்தகத்தில் தேவை குறைந்துள்ளதால், தேக்க நிலை ஏற்படுகிறது. கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டு ஜனவரி மாதத்தில் 67 லட்சம் ரூபாய், பிப்ரவரி மாதம் 2.07 கோடி ரூபாய் வருமான குறைவு ஏற்பட்டு, தற்போது 3.55 கோடி ரூபாயை தொட்டுள்ளது. இதுதொடரும் பட்சத்தில் இந்தாண்டின் முடிவில் 12 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும். எனவே, தேயிலை தூளுக்கான மார்கெட்டிங் யுக்தியை அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகியுள்ளது. இவ்வாறு, சுந்தர் பேசினார்.

**கரூரில் விவசாய தொழிலாளர் சங்க நிர்வாக கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 08,2011,02:36 IST

கரூர்: தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட நிர்வாக குழு கூட்டம் கரூரில் நடந்தது. மாவட்ட துணை தலைவர் செல்வம் தலைமை வகித்தார். மாநில செயலாளர் கணேசன் நிர்வாக குழு முடிவுகளை விளக்கினார். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தேர்தலில் அ.தி.மு.க., கூட்டணி வெற்றி பெற தேர்தல் பணியாற்ற தீர்மானிக்கப்பட்டது. கடுமையான விலைவாசி உயர்வு, தவறான விவசாய கொள்கை, அரசு வீடு வழங்கும் திட்டத்தில் முறைகேடு, தி.மு.க., காங்கிரஸ் குடும்ப ஆட்சி கண்டித்து, கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதியிலும் அ.தி.மு.க., வேட்பாளர்களுக்கு ஆதரவாக வீடுதோறும் பிரச்சாரம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

**மாவுப்பூச்சிகளை அழிக்கும் ஒட்டுண்ணி அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 07,2011,23:57 IST

விருதுநகர் : விருதுநகர் மாவட்டத்தில் மரவள்ளி, பருத்தி, மல்பரி, தக்காளி மற்றும் காய்கறி பயிர்களில்பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது. பூச்சிகளை அழிக்கும் "அசிரோபேகஸ் பப்பாயே' அறிமுக விழா, ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆய்வு மையம் சார்பில் மேலத்தொட்டியபட்டி, குன்னூர், ஈஞ்சார் ஆகிய கிராமங்களில் நடந்தது. பேராசிரியர் முருகேசன், பயிர் மருத்துவ நிலைய நிபுணர்கள் விமலா, கோமதி ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கினர். வேளாண் உதவி இயக்குனர் முத்து முனியான்டி, தோட்டக்கலை இயக்குனர் செல்வம், வேளாண் அலுவலர்கள் முத்துலட்சுமி, ராஜேந்திரன், ராமச்சந்திரன், ஆழ்வார்சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோடை சாகுபடியில் ஈடுபட விவசாயிகள் தயக்கம் : ஸ்ரீவி.,யில் வற்றுகின்றன கண்மாய், கிணறுகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 07,2011,23:59 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கண்மாய், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் நிலத்தடி நீர் குறைவதால் கோடை சாகுபடி செய்வதில் விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். ஸ்ரீவி.,மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டிய பகுதிகளில் நவம்பர் , டிசம்பர் மாதங்களில் பலத்த மழை பெய்தது. செண்பகதோப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம் பகுதி கண்மாய்கள் நிறைந்தன.

பிள்ளையார்நத்தம், பூவாணி, மீனாட்சிபுரம், வேப்பங்குளம், பெருமாள் தேவன்பட்டி, பழைய சென்னெல் குளம் பகுதிகள் உட்பட பல இடங்களில் மிகக்குறைந்தளவு மழை பெய்தது. இதனால் பல கண்மாய்கள் நிறையவில்லை. கடந்த இரு ஆண்டுகளாக ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடும் வறட்சி நிலவியது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன் பெய்த மழையால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. சில மாதங்களுக்கு முன் ஒரு கிலோ வெங்காயம் 60 ரூபாய் வரை விற்பனையானது.

இதனால் இந்தாண்டும் வெங்காயத்திற்கு அதிக விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் கோடை சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகினர். ஆனால் தற்போது அடித்து வரும் வெயிலால் கிணற்றில் குறைந்தளவு தண்ணீரே இருக்கிறது. இதனால் விவசாயிகள் சாகுபடி மேற்கொள்ள தயங்குகின்றனர். இதுகுறித்து விவசாயி ரவிராஜ் கூறியதாவது: கடந்தாண்டு மழை பெய்யாததால் கிணற்று தண்ணீரை எதிர்பார்க்காமல் தண்ணீரை விலைக்கு வாங்கி வெங்காயம் பயிரிட்டோம்.

இந்தாண்டும் கண்மாய்களில் தண்ணீர் இல்லாததால், இவ்வாண்டும் தண்ணீரை விலைக்கு தான் வாங்கி தான் சாகுபடி செய்ய வேண்டும். ஆனால் வெங்காயத்திற்கு கடந்தாண்டு போல் விலை கிடைக்குமா என்ற சந்தேகம் உள்ளது. இதனால் இந்தாண்டு கோடையில் விவசாயம் செய்வது குறித்து ஆலோசித்து வருகிறேன், என்றார்.

**கோவை, வேளாண் பல்கலைக்கழகத்தில் இன்று முத்தமிழ் விழா**

கோவை, ஏப்.8–

கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் முத்தமிழ் விழா இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்குகிறது. இதில் நடிகர் பரத் மற்றும் கவிஞர் பழனிபாரதி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

முத்தமிழ் விழா

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் தமிழ் மற்றும் தமிழர்களின் பண்பாட்டை வளர்க்கும் விதத்தில் முத்தமிழ் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது அதன்படி 2 நாட்கள் நடைபெறும் முத்தமிழ் விழா வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்குகிறது. துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்குகிறார். சிறப்பு விருந்தினராக திரைப்பட பாடலாசிரியர் பழனிபாரதி கலந்து கொண்டு விழாவை தொடங்கி வைக்கிறார். இதை தொடர்ந்து திரைப்பட பாடலாசிரியர் நெல்லை ஜெசிந்தா தலைமையில் கவியரங்கம் நடக்கிறது. மாலை 4.30 மணிக்கு இன்றைய கல்விச் சூழலில் இளைஞர்களிடம் பெருகுவது சுயநலமா? அல்லது பொது நலமா? என்ற தலைப்பில் பட்டிமன்ற பேச்சாளர் ராஜா கலந்து கொள்ளும் பட்டிமன்ற நடக்கிறது. இதில் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டு பேசுகின்றனர். இரவு 7 மணிக்கு திரைப்பட பின்னணி பாடகர் ஆர்.கிருஷ்ணராஜ் கலந்து கொள்ளும் இசைச்சாரல் நிகழ்ச்சி நடக்கிறது.

தமிழர் பண்பாடு கலாச்சாரம்

2–ம் நாள் நிகழ்ச்சியாக நட்சத்திரத்துடன் ஒரு நாடக விழா என்ற தலைப்பில் நடிகர் பரத் பங்கேற்கும் நாடக விழா நடக்கிறது. இதன் பின்னர் இயக்குனர் கரு. பழனியப்பன் தலைமையிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடக்கிறது. பிற்பகல் 2.30 மணிக்கு தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் பரவை முனியம்மா மற்றும் குழுவினரின் நாட்டுப்புற கலை நிகழ்ச்சி இடம் பெறுகிறது. இதை தொடர்ந்து மாலை 6.30 மனிக்கு பல்கலைக்கழக மாணவ–மாணவிகள் பங்கு பெறும் கலை

நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றது.

இதை தொடர்ந்து விழாவின் முடிவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ–மாணவிகள் மற்றும் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா நடக்கிறது.

## பருப்பு வகைகள் விலை குறைந்ததால் உணவு பொருள் பணவீக்கம் 9.18%–ஆக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

பருப்பு வகைகள் விலை குறைந்ததால், நாட்டின் உணவு பொருள் பணவீக்கம் மார்ச் 26–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், கடந்த நான்கு மாதங்களில் இல்லாத அளவிற்கு 9.18 சதவீதமாக குறைந்துள்ளது. இதற்கு முந்தைய வாரத்தில் இது 9.50 சதவீதமாக இருந்தது. தொடர்ந்து இரண்டு வாரங்களாக இந்த பணவீக்கம் ஒற்றை இலக்க அளவிற்கு குறைந்துள்ளது. சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டில் பெரும்பாலான வாரங்களில் இரட்டை இலக்க அளவிற்கு உயர்ந்து இருந்தது.

மீன் – இறைச்சி

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் பருப்பு வகைகள் விலை 5.39 சதவீதம் குறைந்துள்ளது. அதேசமயம், பழங்கள் மற்றும் பால் விலை முறையே 25.40 சதவீதம் மற்றும் 3.87 சதவீதம்

அதிகரித்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 12.80 சதவீதம் உயர்ந்துள்ளது.

காய்கறி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில் விலை 11.41 சதவீதம் உயர்ந்துள்ளது. வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 8.48 சதவீதம் மற்றும் 5.30 சதவீதம் அதிகரித்துள்ளது.

காய்கறிகள் மட்டுமின்றி, உணவு தானியங்கள் விலையும் உயர்ந்துள்ளது. அரிசி மற்றும் கோதுமை விலை முறையே 2.08 சதவீதம் மற்றும் 0.29 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனையடுத்து, ஒட்டுமொத்தத்தில் தானியங்கள் விலை 3.62 சதவீதம் அதிகரித்துள்ளது.

எரிபொருள் பணவீக்கம்

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், உணவு சாரா பொருள் பணவீக்கம் 27.56 சதவீதமாகவும், எரிபொருள் பணவீக்கம் 13.13 சதவீதமாக உள்ளது.

மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கத்தில் உணவு பொருள் பணவீக்கத்தின் பங்களிப்பு 14 சதவீதமாக உள்ளது.

சென்ற ஜனவரி மாதத்தில் 8.23 சதவீதமாக இருந்த பொது பணவீக்கம், பிப்ரவரி மாதத்தில் 8.31 சதவீதமாக உயர்ந்தது. உணவு பணவீக்கம் குறைந்து வருவதால், மார்ச் மாதத்தில் பொது பணவீக்கம் குறைந்து இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உணவு தானியங்கள்

இந்நிலையில், கோதுமை மற்றும் பருப்பு வகைகள் உற்பத்தியில் ஏற்படப் போகும் எழுச்சியால், நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்) நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி வரலாறு காணாத அளவில் 23.59 கோடி டன்னாக உயரும் என மத்திய அரசு முன்னறிவிப்பு செய்துள்ளது. இதனால், உணவு பணவீக்கம் படிப்படியாக குறையும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் 50 சதவீத தேயிலை தூள் தேக்கம்

குன்னூர், ஏப்.8–

குன்னூர் டீசர்வ் தேயிலை ஏல மையத்தில் நடைபெற்ற தேயிலை ஏலத்தில் 50 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.

டீசர்வ் ஏலம்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயிகளுக்காக கூட்டுறவு தேயிலை

தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. 14 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள தேயிலை விவசாயிகள் பச்சை தேயிலையை வழங்கி வருகிறார்கள். பச்சை தேயி லைக்கான விலை மாதந் தோறும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூர் இன்கோசர்வ் வளாகத்தில் உள்ள டீசர்வ் ஏல மையத்தில் ஏலம் விடப்படு கிறது. வாரந்தோறும் புதன் கிழமை ஏலம் இங்கு நடத்தப் படுகிறது. ஏலம் கம்ப்யூட்டர் மூலமாக நடைபெற்று வருகிறது. இந்த தேயிலை தூள் ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தர்கள் கலந்து கொள்கிறார்கள்.

50 சதவீதம் தேக்கம்

விற்பனை எண் 14–க்கான ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 4 லட்சத்து 53 ஆயிரத்து 664 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 2 லட்சத்து 89 ஆயிரத்து 810 கிலோ இலை ரகமாகவும், 1 லட்சத்து 63 ஆயிரத்து 954 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

ஏலத்தில் தேயிலை தூளுக்கு விலை ஏற்றமும், இறக்கமும் இல்லாமல் நிலையான விலை இருந்தது. இருப்பினும் ஏல மையத்தில் 50 சதவீத தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தது.

இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.48–ல் இருந்து ரூ.53 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.60ல் இருந்து ரூ.65 வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.55–ல் இருந்து ரூ.60 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.65–ல் இருந்து ரூ.70 வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 15–க்கான தேயிலை ஏலம் அடுத்த வாரம் நடைபெற உள்ளது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,740-2,770

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 3,550-3,650

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 7,800-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,460-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,795-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேஸ்வரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரிஉள்பட) 11,200.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,135.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,355.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,095.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)550-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஏப்.7-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,960 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துவரப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஏப்.7-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 13,020
2. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 17,412
3. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 16,591
4. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 17,294
5. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 17,294
6. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுக ரூ. 23,340

## கோவை உழவர் சந்தை

கோவை,ஏப்.7-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | | | (கிலோவுக்கு) | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 58-60 | காலிப்பிளவர் | ரூ. | 22-20 |
| கத்தரிக்காய் | ரூ. | 10-12 | பொறியல் தட்டை | ரூ. | 10-14 |
| வெண்டைக்காய் | ரூ. | 14-15 | பச்சை மொச்சை | ரூ. | 28-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5-6,50 | தேங்காய் | ரூ. | 8-13 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 8-10 | பட்டாணி | ரூ. | 44-48 |
| புடலை | ரூ. | 7-8 | பூண்டு | ரூ. | 110-120 |
| பீர்க்கான்காய் | ரூ. | 16-18 | கறிவேப்பிலை | ரூ. | 30-00 |
| சுரைக்காய் | ரூ. | 8-10 | அகத்தி | ரூ. | 14-00 |
| பாகற்காய் | ரூ. | 12-14 | வாழைக்காய் | ரூ. | 14-00 |
| கொத்தவரை | ரூ. | 10-12 | திராட்சை | ரூ. | 40-00 |
| பூசணிக்காய் | ரூ. | 12-00 | திராட்சை (பச்சை) | ரூ. | 66-70 |
| அரசாணிக்காய் | ரூ. | 8-10 | குடைமிளகாய் | ரூ. | 40-00 |
| பேராக்காய் | ரூ. | 18-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 14-16 |
| பச்சை மிளகாய் | ரூ. | 20-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 32-36 |
| குண்டு மிளகாய் | ரூ. | 22-00 | கறிபீன்ஸ் | ரூ. | 14-16 |
| சின்னவெங்காயம் | ரூ. | 17-19 | புஷ்பீன்ஸ் | ரூ. | 36-40 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10-00 | காளான் | ரூ. | 80-140 |
| இஞ்சி | ரூ. | 32-00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| முருங்கைக்காய் | ரூ. | 22-00 | மாங்காய் | ரூ. | 28-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 14-15 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 15-16 |
| சேனைகிழங்கு | ரூ. | 24-00 | கொய்யா1கிலோ | ரூ. | 24-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 22-00 | மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-16 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-15 | வரமிளகாய் | ரூ. | 100-00 |
| சக்கரைவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | மாம்பழம் | ரூ. | 70-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | ஆப்பிள் | ரூ. | 115-00 |
| முள்ளங்கி | ரூ. | 8-12 | சாத்துக்குடி | ரூ. | 37-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 22-00 | நெல்லிக்காய் | ரூ. | 45-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 8-12 | ஆரஞ்சு | ரூ. | 50-00 |
| நூல்கோல் | ரூ. | 16-00 | வெள்ளரி | ரூ. | 8-10 |
| கொத்தமல்லி | ரூ. | 15-16 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16-00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 8-10 | அவரை | ரூ. | 12-16 |
| கலர்கோஸ் | ரூ. | 14-00 | நிலக்கடலை | ரூ. | 36-00 |
| புதினா | ரூ. | 14-00 | மக்காச்சோளம் | ரூ. | 3.50-00 |
| | | | தர்பூசணி | ரூ. | 9-00 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஏப்.7-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,400 | 90.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1150 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1030 | (-) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1520 | 110.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,750 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,000 | 59.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,260 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,030 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,030 | - |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவின்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.22500 |
| மிளகு (சேட்டன்) | ரூ.22900 |
| மிளகு (வயநாடன்) | ரூ.23800 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 15000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 11200 |
| சுக்கு(புதியது) | ரூ.15100 |
| சுக்கு(பழையது) | ரூ.10000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9850 |
| கொப்பரை நாடன் | ரூ.6550 |
| கொப்பரை ராசு | ரூ.6500 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6850 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ.6150 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6660 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 23700 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23850 |
| ரப்பர் பால் | ரூ. 18400 |
| காப்பி | ரூ. 9700 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2800 |
| நேந்திரகாய் | ரூ. 1400 |
| இஞ்சி | ரூ. 1300 |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.200.00 | அதிகபட்சவிலை | ரூ.270.00 |
| சராசரி விலை | ரூ.168.00 | சராசரி விலை | ரூ.257.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.140.00 | குறைந்தபட்சவிலை | ரூ.217.00 |

**பட்டு நூல் ரூ.1,873**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,656.00 | 15632.00 | 15680.00 |
| ஒரு கிராம் | 1,957.00 | 1,954.00 | 1,960.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 58,175.00 | 62,200.00 | 62,500.00 |
| ஒரு கிராம் | 62.25 | 62.20 | 62.50 |

தினகரன்

## ஒரே நாளில் ரூ.3 கோடிக்கு பருத்தி விற்பனை

பதிவு செய்த நாள் 4/8/2011 2:31:17 AM



சேலம் : சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் வாழப்பாடி கிளையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் ஸி3 கோடிக்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டு உள்ளது. சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் வாழப்பாடி கிளையில் நேற்று முன்தினம் பருத்தி ஏலம் நடந்தது. மொத்தம் 12 ஆயிரம் மூட்டை பருத்தி ஏலத்துக்கு வந்தது.

விரைவில் சீசன் முடிய உள்ள நிலையிலும், டி.சி.எச். ரக பருத்திக்கு நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அதன்படி டி.சி.எச். ரக பருத்தி, குவிண்டால் ரூ.7700 முதல் ரூ.8100 வரையிலும், ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ரூ.6200 முதல் ரூ.6600 வரையிலும் ஏலம் போனது. கழிவு பருத்தி ரூ.1250 முதல் ரூ.2800 வரை விற்பனை ஆனது. நேற்று முன்தினம் ஒரே நாளில் ரூ.3 கோடிக்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டு உள்ளது.

**உணவு பணவீக்கம் குறைந்தது**

பதிவு செய்த நாள் 4/8/2011 2:30:08 AM



புதுடெல்லி: கடந்த ஆண்டில் உணவு பணவீக்கம் பெரும்பாலும் இரட்டை இலக்கத்திலேயே இருந்தது. கடன் வட்டி அதிகரிப்பு, விவசாய உற்பத்தி அதிகரிப்பு ஆகியவை காரணமாக, இந்த ஆண்டில் உணவு பணவீக்கம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. கடந்த மார்ச் 26ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் இது 9.18 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது கடந்த 4 மாதங்களில் இல்லாத அளவாகும். பருப்பு வகைகள் 5.39 சதவீதம் குறைந்திருந்ததே பணவீக்கம் குறைந்ததற்கு முக்கிய காரணம். எனினும், மற்ற உணவுப் பொருட்கள் விலை அதிகரித்து உள்ளன.